**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.336/2018 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மஞ்சுளா | தொழில் | |
| த.பெ. | | மதம் | |
| கிராமம் | | சாதி | |
| வயது | | வட்டம் | |

**முதல் விசாரணை - 30.06.2023**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 8 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 03.06.1987 – Xerox copy of Sale deed executed by Kuppusamy in favour of Plaintiff's father – Ex.A.1 (Compared with original).

2. Xerox copy of Death Certificate of Plaintiff's Father – Ex.A.2 (Compared with original).

3. Xerox copy of Patta in the name of Plaintiff's father – Ex.A.3 (Compared with original).

4. 14.09.2009 – Xerox copy of Power of Attorney deed executed by Plaintiff's father to his agent – Ex.A.4 (Compared with original).

5. 01.02.2008 – Xerox copy of Builder Agreement – Ex.A.5 (Compared with original).

6. 15.05.2018 – Xerox copy of Legal Notice issued by the Plaintiff to the Defendant – Ex.A.6.

7. 11.06.2018 – Xerox copy of Reply Notice issued by the Defendant to the Plaintiff – Ex.A.7.

8. Online copy of Legal Heir Certificate – Ex.A.8.

(Ex.A.6 & Ex.A.7-ன் அசல் அல்லது அலுவலக நகல் தாக்கல் செய்யாததால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.336/2018** **P.W.1-மஞ்சுளா** **06.06.2024**

**கூடுதல் முதல் விசாரணை தொடர்ச்சி**

இன்று இந்த வழக்கில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 3 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Ex.A.9 – Chitta in the name of Plaintiff's Father.
2. Ex.A.10 – Adangal in the name of Plaintiff's Father.
3. Ex.A.11 – Sketch.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். இந்த வழக்கின் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு போட்டுள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். நான் யார் பெயரில் உள்ள சொத்தை பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா சோமசுந்தரம் பெயரில் உள்ள சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். என்னுடைய அப்பா 15.11.2017 அன்று மாரடைப்பால் இறந்து விட்டார் என்றால் சரிதான். என் அப்பா சோமசுந்தரம் எனக்கு தனிப்பட்ட முறையில் சொத்து எதுவும் எழுதி தரவில்லை என்ற காரணத்தினால் இந்த பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 25.08.2011 அன்று என் அப்பா ஆலந்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2066/2011ல் பழைய பட்டா எண்.480, புதிய பட்டா எண்.1907ல் 2வது மாடியிலுள்ள பி பிளாக்கில் உள்ள ஒரு வீட்டினை என் பெயரில் செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றால் என் அப்பா அவரது விருப்பத்தின் பேரில் எனக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்தார். எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் அப்பா எனது எதிர்காலம் கருதி என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு கொடுக்க வேண்டிய சொத்திற்காக என் அப்பா செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். மேற்படி செட்டில்மெண்ட் குறித்து எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சொல்லவில்லை. மேற்படி செட்டில்மெண்ட் விவரத்தினை வேண்டுமென்றே மறைத்து பிரதிவாதியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி என் அப்பா செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்த சொத்தை கடந்த 13 வருடங்களாக நானும், என் குடும்பமும்தான் அனுபவித்து வருகிறோம் என்றால் நான்தான் தற்போது அனுபவித்து வருகிறேன். தற்போது செட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தினை ரூ.7,00,000/-க்கு குத்தகைக்கு விட்டு நானும், என்

குடும்பமும்தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கான அனைத்து செலவினையும் பிரதிவாதியே செய்தார் என்றால் சரியல்ல, என் அப்பாதான் என் திருமணத்திற்கான செலவுகளை செய்தார்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)